எண்.6637/கோ.1/இசநி/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்பு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம்(3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009

---

தொலைபேசி எண். (0413)2276098
புதுச்சேரி தேதி: 20.08.2020

## குறிப்பாணை

பொருள்: இசநி – விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டங்கள், 2020 கொரோனா வைரஸ் பரவல் தடுக்கும் வழிமுறைகள் - அறிவுறுத்தல் - சம்மந்தமாக.

பார்வை: மாவட்ட நீதிபதி அவர்களின் 10.08.2020-ஆம் தேதியிட்ட ஆணை எண்.1703/DRDM/DM/D2/2020/77.

****

மேலே பார்வையில் கண்டுள்ள ஆணையின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்படி பார்வையில் கண்டுள்ள ஆணையின்மூலம் புதுச்சேரி மாவட்ட நீதிபதி அவர்கள் விழாக்காலங்களில் கோவிட்' 19 என்கிற கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டு எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். அவ்வாறே எதிர்வரும் 2020-ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழாவில் எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

3. எனவே மாவட்ட நீதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படியும் (திருக்கோயில்களில்) மேற்படி எதிர்வரும் 2020-அம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா கொண்டாட்டங்களின்போது திருக்கோயில்களில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

i. விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களின்போது திருக்கோயில் சார்பாக எவ்விதமான சிலைகளையும் பொது இடங்களில் வைத்தல் கூடாது.

ii. பொதுமக்கள் பார்வையை ஈர்க்கும் அல்லது பொதுமக்கள் கூடும் இடங்களில் எவ்வித புதிய சிலைகளையும் வைத்தல் கூடாது.

iii. இதுசம்மந்தமாக பொதுமக்கள் ஒன்று கூடும்வகையிலான ஊர்வலங்கள் போன்றவற்றை திருக்கோயில் சார்பாக நடத்துதல் கூடாது.

iv. விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களின்போது திருக்கோயில் சார்பாக எவ்விதமான மதம் சம்பந்தப்பட்ட பிரார்த்தனை கூட்டங்கள் மற்றும் ஒன்று கூடுதல் முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

v. மேலும் இது சம்மந்தமாக திருக்கோயில வளாகத்தினுள் எவ்வித புதிய சிலையையும் வைத்தல் மற்றும் நிறுவுதல் கூடாது.

vi. திருக்கோயில்களில் முன்புறமாக விநாயகர் சதுர்த்தியின்போது சிலைகளுக்கு கொட்டகை (அ) ஷாமியானா பந்தல் அமைத்தல் முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

…2/-

Scanned with CamScanner

vii. கோவிட்' 19 என்கிற கொரோனா வைரஸ் பரவும் ஆபத்திருப்பதால் திருக்கோயில்களில் பிரசாத வினியோகம் தடைசெய்யப்படுகிறது.

viii. விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக எந்த ஒரு கலை மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடத்துதல் கூடாது.

4. மேலும் சில முக்கிய ஆகம விதிகளை பின்பற்றும் பொருட்டும் கீழ்கண்ட நிபந்தனைகளை திருக்கோயில் நிர்வாகத்தினர் கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறது.

i. விநாயகர் சதுர்த்தி சிறப்பு நித்தியபடி பூஜைகள் மற்றும் அர்ச்சனைகள் பொதுமக்கள் மறறும் பக்தர்கள் இன்றி நடைபெறவேண்டும்.

ii. விநாயகர் சதுர்த்தியின்போது ஒன்றிற்கு மேற்பட்ட குருக்கள் சிறப்பு பூஜைகள் போன்றவைகளை உரிய சமூக விலகல் விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளலாம் அதற்கும் கூட பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு அனுமதியில்லை.

iii. உபயதாரர் (அ) நன்கொடைதாரர் பூஜையின்போது, பூஜைக்குண்டான கட்டணம்(அ) தொகையை உபயதாரர் (அ) நன்கொடைதாரரிடமிருந்து பெற்று அவரின் பெயரில் பூஜை (அ) அர்ச்சனை செய்தல் வேண்டும். அச்சமயம் உபயதாரர் (அ) நன்கொடைதாரர்கள் ஐந்து நபர்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

iv. முடிந்தால் மட்டும் திருக்கோயில் நிர்வாகத்தினர் முக்கியமான மூலவர் சன்னதிகளை தவிர்த்து ஏனைய விநாயகர் சதுர்த்தி புஜைகள் மற்றும் அர்ச்சனைகளை நேரலையில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யலாம்.

20/08/2020

**(அ.சிவசங்கரன்)**
**ஆணையர்**

o/c 20/8/2020

**பெறுநர்:**

**பெறுநர்:**

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அனைத்து திருக்கோயில்கள்.

நகல் பெறுநர்:

1. செயலர்(இசநி), தலைமைச் செயலகம், புதுச்சேரி.
2. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர்.
4. இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி.

*****

Scanned with CamScanner